<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>

அ.வ.எண்.349/2018 வா.சா.1 செல்வகுமார்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 01.11.2025

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

10) 10-10-2018 அன்று போலீசார் வழக்கு சொத்துக்கு வருவதற்கு நான் எழுத்துமூல புகார் ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் சரிதான். ( **சாட்சி தாமாக வாய்மொழி புகார் என கூறுகிறார்**.) நான் புகார் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் வழக்குரையில் நான் புகார் கொடுக்க முயன்றதாகவும் ஆனால் உரிமையியல் தன்மை கொண்டுள்ளதால் அதனை போலீசார் வாங்க மறுத்ததாகவும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் இணையவழியில் புகார் ஏதும் அளித்துள்ளேனா என்றால் இல்லை. நான் கொடுத்த வெறும் வாய்மொழி புகாரின் அடிப்படையில் தான் 8 போலீசார் அன்றைய தினம் வந்ததாக கூறுகிறேன் என்றால் சரிதான்.

11) நான் வழக்கு சொத்துக்களை கிரையம் செய்த போது பட்டா தாக்கல் செய்யாமல் தான் பதிவு செய்தேன் என்றால் சரிதான். மூல ஆவணத்தின் அடிப்படையில் கிரையம் பதிந்தேன். எனது கிரைய தேதியான 01-08-2018 அன்று பட்டா இல்லாமல் கிரையம் பதிய கூடாது என துறை ரீதியான உத்தரவு நடப்பில் இருந்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு கிரையம் கொடுத்தவர்களுக்கு வழக்கு சொத்துகளில் உரிமையே இல்லாததால் தான் பட்டா இன்றி எனக்கு கிரையம் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் அது அவர்கள் பூர்வீக சொத்து என்ற அடிப்படையில் கிரையம் பெற்றேன். அரசு பணியில் இருக்கும் என் சகோதரரின்

செல்வாக்கை பயன்படுத்தி தான் பட்டா இல்லாமல் வா.சா.ஆ. 2 வா.சா.ஆ. 4 கிரைய ஆவணங்கள் பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

12) 08-10-2018 தேதியில் நான் முதல் பிரதிவாதிக்கு எதிராக மட்டும் கேவியேட் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான்கு பிரதிவாதிகளுக்கு எதிராகவும் தாக்கல் செய்தேன். 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் வழக்கு சொத்துக்களுக்கும் தொடர்பில்லாத நிலையில் அவர்களை மனஉளைச்சல் ஆக்கி அலைகழிக்கும் நோக்கில் நான் 2 முதல் 4 பிரதிவாதிகளை வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நால்வரும் இடையூறு செய்ததால் தான் சேர்த்துள்ளேன். 08-10-2018 தேதியில் நான் கேவியேட் தாக்கல் செய்த நிலையில் 12-10-2018 அன்றே இவ்வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் ஞாபகம் இல்லை.

13) நான் மேற்கூறிய மூல ஆவணத்தில் எனக்கு கிரையம் கொடுத்தவர்களின் முன்னோர்கள் பெயர் தான் இடம் பெற்றுள்ளது என்றும் கிரையம் கொடுத்தவர்களின் பெயர் இடம் பெறவில்லை என்றும் சொன்னால் கிரையம் கொடுத்தவர்களில் கருப்பையா காந்தி என்பவர் பெயர் மட்டும் மூல ஆவணத்தில் உள்ளது மற்ற கிரையம் கொடுத்தவர்களின் பெயர் மூல ஆவணத்தில் இல்லை அவர்கள் முன்னோர்கள் பெயர் தான் உள்ளது.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

**ஒப்பம் /- ( மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி